NOVEMBER 2025

62581/146C1A/144C1A/ 145C1A/147C1A/148C1A/ 118C1A/117C1A/151C1A

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. What is ledger?

   பேரேடு என்றால் என்ன?

2. What do you mean by trial balance?

   இருப்பு சோதனை என்பதன் பொருள் யாது?

3. What is error of omission?

   விடுப்பட்ட பிழை என்றால் என்ன?

4. Give any two examples of operating expenses.

   செயல்பாட்டு செலவுகளுக்கு உதாரணம் ஏதேனும் இரண்டினை தருக.

5. What is net profit?

   நிகர இலாபம் என்றால் என்ன?

6. Write a note on scrap value.

   எஞ்சிய மதிப்பு பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

7. State the meaning of trade bill.

   வியாபார உண்டியல் என்பதன் பொருளை கூறுக.

8. Define single entry system.

   ஒற்றை பதிவு முறை வரையறு.

9. What is a statement of affairs? Why is it prepared?

   நிலை அறிக்கை என்றால் என்ன? ஏன் அது தயாரிக்கப்படுகிறது?

10. Explain the meaning of short workings.

    பற்றாக்குறை என்பதன் பொருளை விளக்குக.

11. Who is lesser?
குத்தகைக்கு விடுபவர் என்பவர் யார்?

12. What do you mean by loss of stock policy?
சரக்கு இழப்பு கொள்கை என்பது பற்றி நீவிர் அறிவது யாது?

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. Explain the different types of subsidiary books.
துணை ஏடுகளின் பல்வேறு வகைகள் பற்றி விளக்குக.

14. Journalise the following transactions.

(a) Purchased goods for cash Rs. 10,000

(b) Sold goods for cash Rs. 50,000

(c) Paid salaries Rs. 2,000

(d) Received commission Rs. 500

(e) Withdrew cash for personal expenses Rs. 1,500.

பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து குறிப்பேட்டு பதிவுகளை தருக.

(அ) ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ரூ. 10,000

(ஆ) ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ரூ. 50,000

(இ) சம்பளம் செலுத்தியது ரூ. 2,000

(ஈ) கழிவு பெற்றது ரூ. 500

(உ) சொந்த செலவுகளுக்காக ரொக்கம் எடுத்தது ரூ. 1,500.

15. Prepare balance sheet of a sole trader as on 31.3.2019 from the following Information:

	Rs.		Rs.
Capital	75,000	Drawings	10,000
Net profit	15,000	Creditors	7,500
Bills payable	3,500	Bank overdraft	10,000
Cash in hand	1,000	Debtors	18,000
Bills receivable	6,000	Buildings	40,000
Machinery	30,000	Stock on 31.3.2019	6,000

கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 31.3.2019 ல் ஒரு வியாபாரியின் இருப்பு நிலை குறிப்பை தயாரிக்க.

	ரூ.		ரூ.
முதல்	75,000	எடுப்புகள்	10,000
நிகர இலாபம்	15,000	கடனீந்தோர்கள்	7,500
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	3,500	வங்கி மேல்வரை பற்று	10,000
கையிருப்பு ரொக்கம்	1,000	கடனாளிகள்	18,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	6,000	கட்டிடங்கள்	40,000
இயந்திரம்	30,000	31.3.2019 அன்று சரக்கிருப்பு	6,000

16. Ms. Samishka purchased a machine for Rs. 8,000 on 1st April 2020. She spent Rs. 3,500 on its installation depreciation is written off 10% p.a. on the straight line method. On 30th June 2023 the machine was sold for Rs. 6,500. Prepare the machinery accounts from 2020 to 2023 assuming that the accounts are closed on 31st December every year.

1.4.2020 அன்று செல்வி சமிஷ்கா ஒரு இயந்திரம் ஒன்றை ரூ. 8,000 க்கு வாங்கினார். அவர் அமைப்பு செலவாக ரூ. 3,500 செலவு செய்தார். நேரடி முறை மூலம் 10% தேய்மானம் கணக்கிடப்படுகிறது. 30.6.2023 அன்று இயந்திரம் ரூ. 6,500 க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருட டிசம்பர் 31 முடிவில் கணக்கு முடிக்கப்படுகிறது என நினைத்து 2020 முதல் 2023 வரையிலான இயந்திர கணக்கை தயாரிக்கவும்.

17. On January 6, 2024, Anbu sold goods to Babu for Rs. 1,500. On the same date , Anbu drew a two months bill on Babu which was duly accepted by the later. Anbu discounted the bill of January 10th 2024 with his banker at 16% per annum. The bill was dishonoured.

Journalise the transactions in the books of Anbu.

ஜனவரி 6, 2024 அன்று அன்பு, பாபு என்பவருக்கு ரூ. 1,500 க்கு பொருட்களை விற்பனை செய்தார். அதே தேதியில் அன்பு, பாபு மீது இரண்டு மாத மாற்றுசீட்டு எழுதினார். பிறகு அது ஏற்று கொள்ளப்பட்டது. அவர் அதனை ஜனவரி 10, 2024 ல் வங்கியில் 16 சதவீதம் தள்ளுபடி செய்தார். அந்த மாற்றுசீட்டு அவமதிக்கப்பட்டது.

அன்பு ஏடுகளில் முதல் குறிப்பேட்டு பதிவுகளை தருக.

18. What are the difference between single entry system and double entry system?

ஒன்றை பதிவு முறைக்கும், இரட்டை பதிவு முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

19. Goods of Rs. 8,000 of Mr. Ram are insured for Rs. 70,000 subject to Average clause. Loss due to fine is assessed of Rs. 16,000. Calculate the claim to be lodged.

திரு. ராம் என்பவரின் சரக்கு ரூ. 80,000 , ரூ. 70,000 க்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. சராசரி கணக்கீட்டிற்கு உட்ப்பட்டது. தீ விபத்தில் நட்டம் ரூ. 16,000 என மதிப்பிடப்பட்டது. காப்பீட்டு கோரிக்கை தொகையை கணக்கிடவும்.

PART C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

20. From the following particulars, ascertain the balance as per pass book on 31.12.2019.

(a) Balance as per cash book Rs. 25,000

(b) Cheque issued but not presented for payment Rs. 1,800

(c) Cheque deposited but not collected Rs. 2,400

(d) Bank paid insurance premium Rs. 1,000

(e) Direct deposit by a customer Rs. 1,600

(f) Interest on investment collected by a bank Rs. 400

(g) Bank charges Rs. 200.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து 31.12.2019 அன்று செல்லேடு காட்டும் இருப்பினைக் கணக்கிடுக.

(அ) ரொக்கப் புத்தக படி இருப்பு ரூ. 25,000

(ஆ) காசோலைகள் வழங்கப்பட்டு வங்கியில் கொடுக்கப்படும் ரூ. 1,800

(இ) வங்கியில் செலுத்தப்பட்டு வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ. 2,400

(ஈ) வங்கி செலுத்திய காப்பீட்டு கட்டணம் ரூ. 1,000

(உ) வாடிக்கையாளரால் நேரடியாக வங்கியில் செலுத்தப்பட்ட காசோலை ரூ. 1,600

(ஊ) வங்கியால் வசூலிக்கப்பட்ட முதலீட்டு மீதான வட்டி ரூ. 400

(எ) வங்கி கட்டணம் ரூ. 200.

21. Prepare trading profit and loss account and balance sheet from the following trial balance of Mr. Mohan.

Debit balances	Rs.	Credit balances	Rs.
Sundry debtors	92,000	Mohan capital	70,000
Plant	20,000	Purchase return	2,600
Interest	430	Sales	2,50,000
Rent and insurance	5,600	Sundry creditors	60,000
Travelling charges	1,320	Bank overdraft	20,000
Wages	7,000		
Sales returns	5,400		
Purchases	1,50,000		
Opening, stock	60,000		
Mohan Drawings	22,000		
Trade expenses	1,350		
Salaries	11,200		
Advertising	840		
Discount	600		
Bad debts	800		
Business premises	12,000		
Furniture and fixtures	10,000		
Cash in hand	2,060		
	4,02,600		4,02,600

Adjustments :

(a) Stock on hand on 31.12.2020 Rs. 90,000

(b) Provide depreciation on premises at 2.5% plant 7.5% and furniture and fixtures at 10%

(c) Write off Rs. 800 as further bad debts

(d) Provide for doubtful debts at 5% on sundry debtors

(e) Outstanding rent was Rs. 500 and outstanding wages Rs. 400

(f) Prepaid insurance Rs. 300 and prepaid salaries Rs. 700.

திரு. மோகன் என்பவரது இருப்பாய்விலிருந்து வியாபார , இலாப நட்ட மற்றும் இருப்பு நிலை குறிப்பினை தயார் செய்க.

பற்று இருப்பு	ரூ.	வரவு இருப்பு	ரூ.
பற்பல கடனாளிகள்	92,000	மோகன் முதல்	70,000
பொறி	20,000	கொள்முதல் திருப்பம்	2,600
வட்டி	430	விற்பனை	2,50,000
வாடகை மற்றும் காப்பீடு	5,600	பற்பல கடனீந்தோர்கள்	60,000
போக்குவரத்து கட்டணம்	1,320	வங்கி மேல் வரைபற்று	20,000
கூலி	7,000		
விற்பனை திருப்பம்	5,400		

பற்று இருப்பு	ரூ.	வரவு இருப்பு	ரூ.
கொள்முதல்கள்	1,50,000		
தொடக்க சரக்கிருப்பு	60,000		
மோகன் எடுப்புகள்	22,000		
வியாபார செலவுகள்	1,350		
சம்பளம்	11,200		
விளம்பரம்	840		
தள்ளுபடி	600		
வராக்கடன்	800		
வணிக வளாகம்	12,000		
அறைகலன் மற்றும் பொருத்துக்கள்	10,000		
கையிருப்பு ரொக்கம்	2,060		
	4,02,600		4,02,600

சரிகட்டுதல்கள்.

(அ) 31.12.2020 அன்று சரக்கிருப்பு ரூ. 90,000

(ஆ) தேய்மானம் வணிக வளாகம் மீது 2.5% பொறி மீது 7.5% மற்றும் அறைகலன் மற்றும் பொருத்துக்கள் மீது 10% உருவாக்குக

(இ) வராக்கடன் ரூ. 800 மேலும் எழுதுக.

(ஈ) பற்பல கடனாளிகள் மீது 5% வரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக

(உ) கொடுபட வேண்டிய வாடகை ரூ. 500 மற்றும் கூலி ரூ. 400

(ஊ) முன்கூட்டி செலுத்திய காப்பீடு ரூ. 300 மற்றும் சம்பளம் ரூ. 700.

22. What are the causes for depreciation?

தேய்மானத்திற்கான காரணிகள் யாவை?

23. Ananth Keeps his books on the single entry system and the following information is available.

	1.1.2019	31.12.2019
	Rs.	Rs.
Cash	9,860	800
Stock	38,520	57,020
Plant and machinery	54,420	61,000
Bills receivables	–	16,480
Sundry debtors	24,840	43,940
Sundry creditors	72,040	80,000
Furniture	4,960	5,220
Drawings	–	5,000

During the year he introduced additional capital at Rs. 20,000. Prepare a statement of profit for the year ended 31.12.2019.

ஆனந்த் என்பவர் தனது ஏடுகளை ஒன்றை முறையில் பின்பற்றுகிறார். அதன் விபரங்கள்.

	1.1.2019	31.12.2019
	ரூ.	ரூ.
ரொக்கம்	9,860	800
சரக்கிருப்பு	38,520	57,020
பொறி மற்றும் இயந்திரம்	54,420	61,000
பெறுதற்குரிய மாற்றுசீட்டு	–	16,480
பற்பல கடனாளிகள்	24,840	43,940
பற்பல கடனீந்தோர்கள்	72,040	80,000
அறைகலன்	4,960	5,220
எடுப்புகள்	–	5,000

ஆண்டில் கூடுதலாக ரூ. 20,000 மூலதனம் செய்யப்பட்டது. 31.12.2019 ம் ஆண்டுக்குரிய இலாப அறிக்கையை தயாரிக்கவும்.

24. The Bengal Coal company are lessees of a mine on a Royalty of Rs. 1.00 per tonne of coal raised with a dead rent or Rs. 20,000 per annum and power to recoup short workings during the first five years of the lease. The output for the first five years was as follows.

Year	Output (tonnes)
1	2,500
2	12,000
3	20,000
4	40,000
5	30,000

Prepare ledger account in the books of the lessees.

பெங்கால் கம்பெனி ஒரு சுரங்கத்தை குத்தகைக்கு எடுத்தது. குத்தகை ரூ. 1 ஒரு டன்னுக்கு குறைந்தபட்ச குத்தகை ரூ. 20,000 ஒரு வருடத்திற்கு மற்றும் பற்றாகுறை முதல் ஐந்து வருடங்களில் எடுத்து கொள்ளலாம். உற்பத்தி விவரம் வருமாறு.

வருடம்	உற்பத்தி (டன்)
1	2,500
2	12,000
3	20,000
4	40,000
5	30,000

சுரங்க உரிமையாளரின் பேரேட்டின் பேரேட்டு கணக்குகளை தயார் செய்க.

———————